**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராசிபுரம்**

OS No.153/2018 13.03.2026

பி.வா.சா.1 (Recall) – மாரிமுத்து

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி இவ்வழக்கை தாவா சொத்தில் தான் அனுபவித்து வருவதை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன். வாதி கிரையம் பெற்ற சொத்து மேல்புறத்தில் உள்ளது என்றால் எனது நிலத்திற்கு ஒட்டினார்போல் மேல்புறத்தில் உள்ளது. 72– 1/4 சென்ட் நிலத்தில் 57–1/4 சென்ட் நிலம் போக மீதி உள்ள நிலத்தைதான் நான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, 81–1/4 சென்டையும் நான்தான் அனுபவித்துவருகிறேன். வாதி 2018ம் வருடம் கிரையம் பெற்ற சொத்தையும் அவர் பழைய சொத்தையும் சமம்செய்து கொண்டார் என்றால் சரியல்ல, அவர் நிலம் மேற்புறத்தில் உள்ளது, எனது நிலம் பள்ளத்தில் உள்ளது. வாதி 2018ம் வருடம் கிரையம் பெற்ற சொத்தையும் அவர் பழைய சொத்தையும் சமம்செய்து விவசாயம் செய்து வருகிறார் வழக்கிற்காக பொய்யாக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி தற்போது மக்காசோளம் வைத்து அறுவடை செய்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல, நான்தான் பயிர்செய்து அறுவடை செய்து வருகிறேன். மேற்படி சங்கதியும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி 28.04.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.